நேபாள வெள்ளத்தில் சிக்கிய

# மக்களை மீட்டிட ஒன்றிய அரசு துரித நடவடிக்கை எடுத்திடுக!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவு!

சென்னை, ஆக.28-

நேபாளத்தில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளப்பெருக்கில் சிக்கியுள்ள சுற்றுலாப் பயணிகளை மீட்டிட ஒன்றிய அரசு துரித நடவடிக்கை எடுத்திட வேண்டும் என நாடாளுமன்ற கழக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-

**நேபாளத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளப்பெருக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, தமிழ்நாட்டைச் சேர்ந்த 57 சுற்றுலாப் பயணிகள் உட்பட நூற்றுக் கணக்கான இந்தியர்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரியவருவது மிகுந்த வேதனையளிக்கிறது.**

**காணாமல் போன சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்யவும், அவர்களின் குடும்பத்தினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கவும், நேபாள அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு வெளியுறவுத் துறை அமைச்சரை நான் வலியுறுத்துகிறேன்.**

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

பரந்தூர் விமான நிலையத் திட்டம்;

# தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் என்பதால் செயல்படுத்த முடிவெடுத்தோம்!

## சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!

சென்னை, ஆக.28-

சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசும்போது, பரந்தூர் விமான நிலைய திட்டம் என்பது தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் என்பதாலே செயல்படுத்த முடிவு செய்யப்பட்டதாக குறிப்பிட்டார்.

பேரவையில் சட்டமன்ற கொறடா எ.வ.வேலு பேசியதாவது:-

விமான நிலையம் அமைப்பது என்பது ஒன்றிய அரசின் நிர்வாகத்திற்கு உட்பட்டது, மாநில அரசின் பணி நிலம் கையகப்படுத்துவதோடு முடிந்து விட்டது, அதே போல்தான் பரந்தூரில் விமான நிலையம் அமைக்க ஒப்புதல் அளித்த ஒன்றிய அரசின் ஆணையை ஏற்று பரந்தூர், ஹேமநாதபுரம் ஆகிய பகுதியில் உள்ள 13 கிராமங்களை இத்திட்டத்திற்கு பயன்படுத்த முடிவு செய்து, ஒரு குழு அமைக்கப்பட்டது, குழுவில் நானும் அப்போது அமைச்சர்களாக இருந்த தங்கம் தென்னரசுவும், மாவட்ட அமைச்சரான தாமோ.அன்பரசனும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அந்த 13 கிராம விவசாயிகளையும், பொது மக்களையும் வரவழைத்து பேசினோம், ஒரு நாள் முழுவதும் பேச்சு வார்த்தை நடைபெற்றது, இந்த பேச்சுவார்த்தையில் 11 கிராம மக்கள் நிலம் எடுக்க ஒப்புதலை தந்தனர்.

ஆனால் பரந்தூர் ஹேமநாதபுரம் இரண்டு கிராமங்களும் ஒப்புதல் தரவில்லை, அதனால் அவர்களோடு மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தினோம், அதன் பின்னர் இத்திட்டம் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டம் என்பதன் அடிப்படையில் தொடர்ந்து செயல்படுத்த முடிவு செய்தோம்,

தற்பொழுது பார்த்தீர்கள் என்றால் அண்டை மாநிலங்களான கர்நாடகம் மற்றும் ஆந்திராவில் விமான நிலைய விரிவாக்கம் செய்யும் பணி நடைபெற்று பொருளாதாரம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே வருகிறது, அதைப்போல தான் தமிழ்நாட்டிலும் பொருளாதார வளர்ச்சி மேம்பட இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்தோம், இதனால் தி.மு.க.விற்கு ஒன்றும் லாபம் இல்லை.

இவ்வாறு எ.வ.வேலு பேசினார்.

நேபாள பெருவெள்ளம்:

# உயிரிழப்பு 165 ஆக அதிகரிப்பு; 590க்கும் மேற்பட்டோர் மாயம்!

## மீட்புப் பணிகள் தீவிரம்!

காத்மண்டு, ஆக.28-

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி நேபாள திபெத் எல்லைப் பகுதிகளில் இதுவரை 95 பேர் உயிரிழந்த நிலையில், 291 வெளிநாட்டவர் உள்பட 384 சுற்றுலாப் பயணிகளைக் காணவில்லை என்று நேபாள சுற்றுலாத் துறை தெரிவித்துள்ளது. இதில் 105 பேர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நேபாளத்தில் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நேபாளத்தில் இன்று காலை 8.30 மணியளவில் ரசுவா மாவட்டத்தில் போட்டே கோசி ஆற்றில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. சற்றும் எதிர்பாராத நிலையில் ஏற்பட்ட இந்த திடீர் வெள்ளப் பெருக்கில் ஆற்றங்கரையோரத்திலிருந்த பல்வேறு கட்டிடங்கள், வாகனங்கள், ஆற்றின் குறுக்கே இருந்த பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டன. 95 பேர் உயிரிழப்பு என உறுதி செய்யப்பட்ட நிலையில், உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி பலர் உயிரிழந்த நிலையில், 291 வெளிநாட்டவர் உள்பட 384 சுற்றுலாப் பயணிகளைக் காணவில்லை என்று நேபாள சுற்றுலாத் துறை தெரிவித்துள்ளது. இதில் 105 பேர் இந்தியர்கள்.

மாயமான வெளிநாட்டவர்கள் இந்தியா, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, அமெரிக்கா, மலேசியா, பிரிட்டன், தென் ஆப்பிரிக்காவை சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. தற்போதைய நிலவரப்படி 105 இந்தியர்களை காணவில்லை. இவர்கள் சாம்ராட் டூர்ஸ் அண்ட் டிராவல்ஸ், லீஃப் ஹாலிடே போன்ற சுற்றுலா ஏஜென்சிகள் மூலம் சென்றவர்கள் என்று தெரிகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேபாள அரசு மீட்புப் பணிகளைத் தொடங்கியுள்ளது. ஆனால், வெள்ள நீர் மட்டம் அதிகமாக உள்ள இடங்களில் ஹெலிகாப்டர்களால் தரையிறங்க முடியவில்லை.

இதற்கிடையில், சுற்றுலா பயணிகள் குறித்த விவரங்களை அறிய 1234 என்ற கட்டணமில்லை அவசர எண் 1144 என்ற ஹாட்லைன் எண், 98512 89445 என்ற சுற்றுலா காவல் துறை தொடர்பு எண் ஆகியனவற்றை நேபாள சுற்றுலா துறை அறிவித்துள்ளது.

**தமிழர்கள் நிலவரம்:**

நேபாளத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளப்பெருக்கில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 சுற்றுலாப் பயணிகளின் நிலை குறித்த தகவல் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று அதிகாரிகள் இன்று தெரிவித்தனர். காணாமல் போனவர்களை விரைவாக மீட்கும் பணியில் மூத்த அரசு அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக முதல்வர் ஜோசப் விஜய் தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த 57 சுற்றுலாப் பயணிகளில், 20 பேர் குறித்த விவரங்கள் மட்டுமே இதுவரை கிடைத்துள்ளதாக அம்மாவட்ட ஆட்சியர் ரேவதி தெரிவித்தார். இதுகுறித்து பேசிய அவர், "20 பேர் குறித்த விவரங்கள் மட்டுமே இதுவரை கிடைத்துள்ளது. மீதமுள்ளவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து தற்போது எங்களுக்குத் தெரியவில்லை; கூடுதல் தகவல்களுக்காகக் காத்திருக்கிறோம். அடையாளம் காணப்பட்ட 20 பேரில் 11 பேர் பெண்கள் என்று அதிகாரப்பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன" எனத் தெரிவித்துள்ளார்.

**தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு தொலைபேசி எண்கள்:**

நேபாளத்தில் சிக்கித்தவிக்கும் தமிழர்களைத் தொடர்பு கொள்ள உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பில், நேபாள வெள்ள பாதிப்பு தொடர்பாக தகவல்களைப் பெற தொலைபேசி எண்ணான 1800 309 3793 என்ற எண்ணைப் பயன்படுத்தலாம். வெளிநாட்டில் உள்ளவர்கள் மிஸ்டு கால் கொடுப்பதற்காக +9180 6900 9900 என்ற எண்ணும், நேரடியாகப் பேசுவதற்காக +91 80 6900 9901 என்ற எண்ணும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும், புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லக் கட்டுப்பாட்டு அறையைத் தொடர்பு கொள்ள 92895 16712 என்ற கைபேசி எண்ணும் அறிவிக்கப்பட்டு, மீட்புப் பணிகள் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் தீவிரமாக முடுக்கிவிடப்பட்டுள்ளன.

**இந்தியத் தூதரகம் அவசர எண்கள் அறிவிப்பு:**

இதற்கிடையில், நேபாளத்தில் உள்ள இந்தியத் தூதரகம் அவசர எண்களை அறிவித்துள்ளது. +977 985 131 6807, +977 970 910 7500 ஆகிய எண்களில் தங்களின் உறவுகள் பற்றி விவரம் அறிய, தகவல் தெரிவிக்க தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

**இந்தியா உதவிக்கரம்:**

நேபாள திடீர் வெள்ளப் பெருக்கு தொடர்பாக நேபாள பிரதமர் பலேந்திரா ஷாவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்தத் துயர்மிகு நேரத்தில் மனிதாபிமான அடிப்படையில் அனைத்துவிதமான உதவிகளையும் இந்தியா செய்யும் என்று உறுதியளித்துள்ளார்.

இந்த வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 165ஆக அதிகரித்துள்ளது. மேலும், 142 இந்தியர்கள் மற்றும் 37 வெளிநாடு வாழ் இந்தியர்கள் உட்பட சுமார் 590 சுற்றுலாப் பயணிகளை காணவில்லை. இவர்களை தேடும் பணி மற்றும் மீட்பு பணிகள் தொடர்ந்து தீவிரமாக நடைபெற்றுவருகிறது.

நேபாள சுற்றுலா வாரியத்தின் தகவல்படி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து 341 வெளிநாட்டினர் மற்றும் 93 நேபாள நாட்டினர் உட்பட குறைந்தது 590 காணாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து உடனடியாக இந்தியாவும் மனிதாபிமான உதவியில் இறங்கியுள்ளது.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அன்பில் பொய்யாமொழி

ஆகஸ்ட் 28 (1999)



திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வர்.

தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவர்.

1989–91 மற்றும் 1996–99ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


தமிழ்நாட்டில் ஆசிரியர்களுக்கு 'டெட்' தேர்விலிருந்து விலக்கு!

# நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் கொண்டுவர தி.மு.க. உறுதுணையாக இருக்கும்!

## சட்டப்பேரவையில் தனி தீர்மானத்தின் மீது சட்டமன்ற கொறடா எ.வ.வேலு பேச்சு!

**சென்னை, ஆக.28-**

**தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர்களுக்குடெட் தேர்வில் விலக்கு கிடைத்திட வும், சலுகைகள் பெறுவதற்கும், நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் கொண்டுவர திமுக உறுதுணையாக இருக்கும். தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆசிரியர் தகுதி தேர்வு தொடர்பான தனி தீர்மானத்தில் பேசிய சட்டமன்ற கொறடா எ.வ.வேலு குறிப்பிட்டார்.**



சட்டமன்றத்தில் ஆசிரியர் தகுதி தேர்வு தொடர்பாக ஒன்றிய அரசை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தனி தீர்மானத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டமன்ற கொறடா எ.வ.வேலு பேசியதாவது:-

கடந்த திராவிட மாடல் ஆட்சியின் போதே, அப்போதைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் டெட் தேர்வு தொடர்பான ஆசிரியர்களின் கோரிக்கைகள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது,

தற்பொழுது உள்ள ஆசிரியர்கள் எல்லாம் 20 ஆண்டுகளுக்கு முன்பு படித்து முடித்து பணிக்கு வந்தவர்கள், தற்போதைய டெட் தேர்வு என்பது புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் நடைபெறுவதால், தற்பொழுது உள்ள ஆசிரியர்கள் அதை எழுதி தேர்ச்சி பெறுவது மிகவும் கடினம் என்ற காரணத்தால் அப்போது சட்டமன்றத்தில் டெட் தேர்வு தேவையில்லை என்று தீர்மானம் நிறைவேற்றி அதை ஒன்றிய அரசு அனுப்பி வைத்தோம், மேலும் இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் அரசின் சார்பில் வழக்கு தொடரப்பட்டது, அதில் சில ஆசிரியர்களும் தங்களை இணைத்துக் கொண்டனர், ஆனால் வழக்கின் இறுதியில் சீராய்வு மனுவிலும் மற்றும் பிரதான வழக்கிலும் அளிக்கப்பட்ட தீர்ப்பில் டெட் தேர்வு அவசியம் என தீர்ப்பு வழங்கப்பட்டது,

இதையடுத்து சட்டமன்ற தேர்தல் வந்துவிட்ட காரணத்தால் தேர்தலுக்குப் பிறகு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அதன் அடிப்படையில் நாடாளுமன்றத்திலும் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் துணை கொண்டு புதிய சட்டத்தை கொண்டு வர திமுக தலைவர் ஸ்டாலின் அவர்கள் எண்ணியிருந்தார், , இப்பொழுது இங்கு கொண்டுவரப்பட்ட தனித்தீர்மானத்திலும், பணி பாதுகாப்பு மற்றும் பதவி உயர்வு உள்ளிட்டவை தொடர்ந்து ஆசிரியருக்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது, இந்த தனி தீர்மானத்தை திமுகழகத்தின் சார்பில் முழு மனதுடன் ஆதரிக்கிறோம், மேலும் வருங்காலத்தில் நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் புதிய சட்டம் கொண்டு வருவதற்கும் ஆசிரியர்களுக்கு சலுகைகளை பெற்றுத் தருவதற்கும் திமுக என்றென்றும் உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எ.வ.வேலு பேசினார்.

பரந்தூர் விமான நிலையத் திட்டம் ரத்தால் பூந்தமல்லி – சுங்குவார்சத்திரம் வரை மட்டுமே

# மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும்!

சென்னை, ஆக.28-

கடந்த ஆட்சியின் போது, பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்கப்படும் என அரசு அறிவித்தது. இதை தொடர்ந்து, பூந்தமல்லி முதல் பரந்தூர் வரை 53 கி.மீ. தூரம் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு, கடந்த 2025ம் ஆண்டு மாதம் விரிவான திட்ட அறிக்கையை தமிழக அரசிடம் மெட்ரோ ரயில் நிறுவனம் சமர்ப்பித்தது.

அதற்கு, தமிழக அரசு 2025ம் ஆண்டு ஜூன் மாதம் ஒப்புதல் அளித்து அரசாணை வெளியிட்டது. அதற்கான ஆரம்ப கட்ட பணிகள் தொடங்கப்பட்டது.

இதனிடையே, தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு த.வெ.க. அரசு பொறுப்பேற்ற நிலையில், பரந்தூர் புதிய விமான நிலைய திட்டத்தை ரத்து செய்வதாக சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் அறிவித்தார்.

இதனால், பூந்தமல்லி பரந்தூர் மெட்ரோ ரயில் திட்டத்தின் தூரம் குறைக்கப்பட்டு, பூந்த மல்லியில் இருந்து சுங்குவார்சத்திரம் வரை மட்டுமே திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: பூந்தமல்லி - பரந்தூர் மெட்ரோ ரயில் திட்டத்தை பொறுத்த வரை இரண்டு கட்டங்களாக செயல்படுத்த திட்ட மிட்டோம்,

முதல் கட்டம் பூந்தமல்லி - சுங்குவார்சத்திரம் வரை, 28 கி.மீ. தூரம் 8,779 கோடி ரூபாயிலும், இரண்டாவது கட்டம் சுங்கு வார்சத்திரத்தில் இருந்து பரந்தூர் விமான நிலையம் 2வது முனையம் வரை, 25 கி.மீ. தூரம் 7ஆயிரம் கோடி ரூபாயிலும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.

தற்போது பரந்தூர் விமான நிலையம் ரத்து செய்யப்பட்டுள்ளதால் பூந்தமல்லி - சுங்குவார்சத்திரம் வரை மட்டுமே முதல் கட்டத்துடன் திட்டம் நிறைவு செய்யப்படும். இத்திட்டம் மத்திய, மாநில அரசின் பங்களிப்பில் செயல்படுத்தப் படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# நாளைய பிரதமர் விஜய் என த.வெ.க. போஸ்டர்!

## கூட்டணியிலிருந்து கழற்றி விட திட்டமா? காங்கிரசார் கொந்தளிப்பு!

தூத்துக்குடி, ஆக.28-

தவெக தலைவர் விஜய்யை நாளைய பிரதமர் என அழைத்து தூத்துக்குடியில் பரபரப்பு போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. அமித்ஷா உத்தரவுப்படி கூட்டணியிலிருந்து தங்கள் கட்சியை கழற்றி விட தவெக தலைமை திட்டமிட்டுள்ளதா? என காங்கிரசார் கொந்தளிக்கின்றனர்.

வரும் நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வேட்பாளராக ராகுலை முன்னிறுத்த அகில இந்திய காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. தமிழக காங்கிரசும் அதையே கூறி வருகிறது. ஆனால் இந்தியா கூட்டணியில் உள்ள சில கட்சிகள், கூட்டணி வெற்றி பெற்ற பின்னர், பிரதமரை முடிவு செய்யலாம் என்று கூறி வருகின்றன.

இந்நிலையில் தமிழ்நாட்டில் திமுக கூட்டணியிலிருந்து வெளியேறிய காங்கிரஸ், த.வெ.க. அணியில் இடம்பெற்றது மட்டுமல்லாமல், அமைச்சரவையிலும் அங்கம் வகித்துள்ளது. மேலும் பிரவீன் சக்கரவர்த்திக்கு மாநிலங்களவை இடத்தையும் பெற்றது. இதுதவிர வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணியில் தவெகவையும் சேர்க்க காங்கிரஸ் முயற்சித்து வருகிறது. ஆனால் இதுகுறித்து விஜய் தரப்பில் எந்த விதமான கருத்தும் இதுவரை தெரிவிக்கவில்லை. இதற்கிடையே சமீபகாலமாக தமிழ்நாடு சட்டமன்றத்திலும், பொது வெளியிலும் அடுத்த பிரதமர் விஜய் என த.வெ.க.வினர் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் தூத்துக்குடி மாநகர் முழுவதும் விஜய்யை நாளைய பிரதமர் என அழைத்து பரபரப்பு போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. அதில், "நாள்தோறும் மக்கள் நலத் திட்டங்கள், சொன்னதை செய்யும் தளபதி, ஆண்டுக்கு 3 விலையில்லா சிலிண்டர்கள், அரசு பேருந்துகளில் மாவட்ட அளவில் மகளிர் கட்டணமில்லா வெற்றி பயண திட்டம், நல்லாட்சி நாயகர், இன்றைய முதல்வர், நாளைய பிரதமர். ஜோசப் விஜய்க்கு நன்றி நன்றி!! நன்றி!!! என குறிப்பிட்டு தூத்துக்குடி மத்திய மாவட்ட தவெக சுதாகர்" பெயர், படத்துடன் ஒட்டப்பட்டிருந்தது. சுதாகர் அதிமுகவில் அண்ணா தொழிற்சங்க மாவட்ட தலைவராக பொறுப்பு வகித்து, பின்னர் அக்கட் சியிலிருந்து விலகி தவெக வில் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரசை கூட்டணியின் உள்நோக்கத்திலிருந்து வெளியேற்றும் விஜய்யை பிரதமர் என அழைத்து தவெகவினர் போஸ்டர் ஒட்டுகின்றனர். இதற்கு மறைமுகமாக விஜய்யின் ஆசி இருக்குமோ? என்று காங்கிரசார் சந்தேகிக்கின்றனர். அதாவது சமீபத்தில் சென்னையில் தென் மண்டல முதல்வர்கள் மாநாடு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நடந்தது. அப்போது முதல்வர் விஜய்யிடம், அகில இந்திய அளவில் செல்வாக்கிழந்த காங்கிரசை ஏன் நீங்கள் தோளில் சுமக்கிறீர்கள்? அதை கழற்றி விடுங்கள் என்று கூறியதாக தெரிகிறது. திமுகவின் முதுகில் குத்தி விட்டு விலகிய காங்கிரசை எக்காலத்திலும் இனி கூட்டணியில் சேர்க்க மாட்டோம் என்று அக்கட்சியின் முன்னணி நிர்வாகிகள் கூறி வரும் நிலையில், தவெகவும் கைவிட்டால் காங்கி ரஸ் நட்டாற்றில் நிற்கும் என்பது அமித்ஷாவின் கணக்கு. இதற்காகவே அவர், விஜய்யிடம் காங்கிரசை கழற்றி விடுமாறு கோரிக்கைவைத்துள்ளதாகவும், அதன் வெளிப்பாடாகவே, 2029ல் ராகுல்தான் இந்தியா கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் என்று காங்கிரசார் கூறி வரும் நிலையில் அக்கட்சியை வெறுப்பேற்ற விஜய்யை பிரதமர் வேட்பாளர் என்று தவெகவினர் கூறி வருவதாக காங்கிரஸ் தொண்டர்கள் கொந்தளிக்கின்றனர். இதனால் இப்பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கும் நிலையில் விஜய்யின் அமைச்சரவையில் காங்கிரஸ் நீடிக்குமா? என்ற சந்தேகம் காங்கிரஸ் கட்சியினரிடையே எழுந்துள்ளது.


33 ஆம் ஆண்டு நினைவு நாள்



காஞ்சிபுரம் கே.டி.எஸ்.மணி

மறைவு – 28.8.1993

★★★

இறுதி மூச்சு உள்ள வரை

பெரியார், அண்ணா, கலைஞர்

வழி நின்ற சுயமரியாதைச் சிங்கம்!

தம் உடலைத் தானம் செய்து

புகழுலகின் உச்சிக்கே சென்றுவிட்ட உத்தமர்!

அ.இராமமூர்த்தி – இரா.அருளரசன்

உறவினர்கள், நண்பர்கள். (விம்)